Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி-10 27-10-2003 திங்கட்கிழமை ஓசை 251

படச்சுருள்கள் அனைத்தையும் கனினி தொழில் நுட்பத்தில் ஒருமனி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள், கனினி முறை வீடியோ மிக்சிங், பாடல் பதிவுகள், அனைத்திற்கும்

Jaffna Road, Kilinochchi.
யாழ் சாலை, கிளிநொச்சி.

# யுத்தத்தின் முன்னதான இயல்புநிலை வடக்கு-கிழக்கில் ஏற்படுத்தவேண்டும்!



## இ.நி.சபை கோருவதற்குக் காரணம் இதுவேயென சந்திரசேகரனிடம் தமிழ்ச்செல்வன் விளக்கம்

(அலுவலக செய்தியாளர்)

**இன்றைய பேச்சுக்களின் போது விடுதலைப்புலிகள் ஆயுதம் ஏந்துவதற்கு முன்னர் வடகிழக்கில் என்ன நிலை இருந்ததோ அந்த நிலையைத் தற்போது ஏற்படுத்தவேண்டும் என்பதற்காகவே அவர்கள் இடைக்கால நிர்வாகசபையைக் கோருவதாக எம்மிடம் தெரிவித்துள்ளார்கள். இது ஒரு அரசியல் தீர்வல்ல. யுத்தத்தின் பின் ஏற்பட்டுள்ள அவல நிலை நீங்க வேண்டும், சுமுகநிலை ஏற்படவேண்டும் என்பதற்காகவே இடைக்காலநிர்வாகசபைபற்றி அவர்கள் பேசியிருக்கிறார்கள்.**

இவ்வாறு நேற்று அரசியற்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்துப் பேச்சு நடாத்திய பின்னர் பத்திரிகையாளருடன் பேசிய மலையக மக்கள் முன்னணித் தலைவரும் சமூக அபிவிருத்தி அமைச்சருமான சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் சமாதானச்செயலகத்தில் காலை 9.30மணிக்கு ஆரம்பமான சந்திப்பில் அமைச்சர் சந்திரசேகரன் அடங்கிய குழுவினர் கலந்துகொண்டனர். இச் சந்திப்பு 12.00 மணியளவில் முடிவடைந்தது.

இச்சந்திப்பு குறித்து மேலும்

(8ஆம் பக்கம் பார்க்க...)

## தமிழ்ச்செல்வன் நேற்று மனோகணேசனுடன் சந்திப்பு

### ஒன்றரை மணிநேரம் நீடித்த பேச்சு

(கிளிநொச்சி)

கொழும்பு பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் தலைமையிலான குழுவினர் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் அவர்களை நேற்று சந்தித்து கலந்துரையாடினர்.

கிளிநொச்சி அரசியல்துறை நடுவப்பணியகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பு சுமார் ஒன்றரைமணி நேரம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பத்திரிகையாளர்களின் கேள்விக்கு பதிலளித்த பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் விடுதலைப்புலிகள் தற்போது

(8ஆம் பக்கம் பார்க்க...)



## தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைப்பதவியிலிருந்து சங்கரி விலக வேண்டும் அல்லது விலக்க வேண்டும்

### -கூட்டணி மட்டக்களப்புக் கிளை ஏகமனதாகத் தீர்மானம்

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தலைமைப் பதவியில் இருந்து ஆனந்த சங்கரி விலக வேண்டும் இல்லையேல் கட்சியின் செயலாளர் மத்திய குழுவைக் கூட்டி அவரைப் பதவியில் இருந்து நீக்கு வதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக் களப்பு கிளை ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தமிழர் விடுதலைக்கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட கிளைக் கூட்டம் நேற்று முற்பகல் பத்து மணிக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பராராஜசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மத்திய செயற்குழு உறுப்பினர் ஒன்பது பேர் உட்பட 21 பேர் கலந்து கொண்டனர்.

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப்புலிகள் அல்ல என்று கூறிய கருத்தை மாவட்டக் கிளை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனந்தசங்கரியின் இக் கூற்றை

(8ஆம் பக்கம் பார்க்க...)

## க.கா.குழுத்தலைவரின் அறிவுறுத்தல்களை கவனத்திற் கொள்ளத்தேவையில்லை

### - முப்படைத்தளபதிகளுக்கு சந்திரிகா பணிப்பு

போர் நிறுத்தக்கண்காணிப்புக் குழுத்தலைவரின் அறிவுறுத் தல்களையோ ஆலோசனை களையோ சிறிலங்காவின் முப் படைத் தளபதிகள் கவனத்திற் கொள்ளத் தேவையில்லை என சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பணித்துள்ளார்.

இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரி, விமானப்படைத்தளபதி எயார் மார்சல் டொனால்ட் பெரேரா ஆகியோருக்கே இவ்வாறு எழுத்து மூலம் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

கண்காணிப்புக்குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சனை உடனடியாகப் பதவி நீக்குமாறு கோரி நோர்வே பிரதமருக்கான கடிதத்தை கொழும்பிலுள்ள நோர்வே தூதுவர் கான்ஸ் பிரஸ்காரிடம் கையளித்த பின்னர் முப்படைத்தளபதிகளுக்கும் இக்கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

(8ஆம் பக்கம் பார்க்க...)

## சமாதானத்தைக் குழப்பும் நடவடிக்கையில் ராணுவமும், இனவாதக்கட்சிகளும் தீவிரம்

### -யாழ். தே.எ.பே. மாநாட்டில் தங்கன்

(யாழ்ப்பாணம்)

சமாதானத்தை குழப்பும் நடவடிக்கையில் ராணுவத்தினரும் தென்னிலங்கை இனவாதக் கட்சிகளும் தீவிரமாக செயற்பட்டு வருவதாக தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் சுட்டிக்காட்டினார்.

நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற யாழ். மாவட்ட பேராளர்களுக்கான இரண்டாவது சங்கம நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளால் எதிர்வரும் 31ஆம் திகதி அரசாங்கத்திடம் கையளிக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாகசபை தொடர்பான திட்ட வரைவு இலங்கையை இரண்டாகப் பிரிக்கும் நடவடிக்கை எனக் கூறி எதிர்க்கட்சியும், சிஹல உறுமய மற்றும் ஜே.வி.பி. போன்ற கட்சிகளும் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதுடன் பொய்ப்பிரச்சாரங்களையும் செய்து வருகின்றன.

அத்துடன் தற்போதுள்ள சமாதானத்தை நம்பி வடக்கு-கிழக்கில் உள்ள படையினரை அகற்றுவது என்பது சாத்தியப்பாடானது அல்ல என வடமுனை போர்த் தளபதிகளும் கூறிவருகின்றனர். இந்நிலையில் தற்போது ஆட்சியில் இருக்கும் அரசாங்கமும் எம்மால் கையளிக்கப்படும் திட்ட வரைவை பரிசீலித்து அதற்குரிய தகுந்த தீர்வை தரக்கூடிய நிலையில் இல்லாததால் தற்போது அச்சுறுத்தலும் நெருக்கடியும் மிக்க ஒரு இக்கட்டான சமாதானத்தை மக்கள் அனுபவித்து வருகின்றனர்.

(8ஆம் பக்கம் பார்க்க...)

## மூதூரில் தமிழர் மீது வாள்வெட்டு முஸ்லிம்களின் லொறி எரிப்பு

திருகோணமலை நேற்று நண்பகல் முதல் ஊரடங்கு அமுல் மூதூர் பொலிஸ் பிரிவில் நேற்று நண்பகல் 12மணி தொடக்கம் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. இன்று திங்கட்கிழமை காலை 6.00 மணிக்கு ஊரடங்குச்சட்டம் நீக்கப்படும் என்று பொலிஸ்அத்தியட்சகர் தயா சமரவீரா தெரிவித்தார்.

சனிக்கிழமை மாலை மூதூரில் இருந்து மல்லிகைத் தீவு நோக்கிச் சென்ற இருதமிழர்கள் தாக்கப்பட்டனர். நேற்றுக் காலை திருகோணமலை வருவதற்காக மூதூர் இறங்குதுறைக்கு வந்திருந்த இரண்டு தமிழர்கள் தாக்கப்பட்டனர். அதனையடுத்து முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான லொறி ஒன்று மல்லிகைத்தீவு என்னுமிடத்தில் வைத்து எரிக்கப்பட்டது. இச்சம்பவங்களை அடுத்தே பொலிஸ் ஊரடங்கு நேற்று நண்பகலுடன் அமுலுக்கு கொண்டுவரப்பட்டதாக பொலிஸ் அத்தியட்சகர் தாயா சமரவீரா தெரிவித்தார்.

மேலும் வன்செயல்கள் பரவாமலிருக்கவும், தடுக்கவுமே ஊரடங்குச் சட்டம் மூதூரில் அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ள

(8ஆம் பக்கம் பார்க்க...)

# வரி விளம்பரம்

## தவறவிடப்பட்டது

பொன்னுத்துரை பத்மராஜா என்பவரின் தேசிய அடையாள அட்டையும் (513632711 V), தொழில் அடையாள அட்டையும், மூக்குக் கண்ணாடியும் கிளிநொச்சி சந்திக்கும் வட்டக்கச்சி சந்திக்குமிடையில் 2003.10.25ஆம் திகதி தவறி விட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் அல்லது வாணி வைத்திய நிலையம் விசுவமடு சந்தியில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். (3121)

## தவறிவிட்டது

இரத்தினம் இந்திரகுமார் என்பவருடைய தேசிய அடையாள அட்டை இல 743130376 V சிவலிங்கம் இந்துமதி என்பவருடைய தேசிய அடையாள அட்டைகளும், பயண அனுமதிச்சிட்டைகளும் கடந்த 17.10.2003இல் முகமாலை கிளிநொச்சிக்கும் இடையே தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் வேண்டுகின்றேன். (3122)

## திறப்பு விழா

## வெண்ணிலா சிகை அலங்கரிப்பு நிலையம்

**(நியூ ஸ்ரைல் சலூன்)** 27-10-03

கிளிநொசசி மாநகரில் தமது தனித்துவமான சேவை மூலம் பல வழமையாளர்களைக் கொண்ட நிறுவனம் ,தற்பொழுது கிளிநொச்சி புகையிரத நிலைய வீதியில் (சந்தை பின்புறமாக) புதிதாக அமைக்கப்பட்டு இன்று முதல் ஆரம்பிக்கப்படுகிறது என்பதனை வழமையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

வெண்ணிலா சிகை அலங்கரிப்பு நிலையம்,
(நியூ ஸ்ரைல் சலூன்)
புகையிரத வீதி, கிளிநொச்சி.
(3123)

## முதலாம் ஆண்டு நினைவுதினம்

தோற்றம் 22 - 04 - 1935



மறைவு 06 - 11 - 2002

### திருமதி முத்துசாமி செல்வபாக்கியம்

யாழ்/வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், யாழ்/காங்கேசன்துறையை நிரந்தர வசிப்பிடமாகவும்,மு/புதுக்குடியிருப்பை வசிப்பிடமாகவும்.

குணமெனும் குன்றேறி கோதையே எங்கள்
மனமெங்கும் நீ நிறைந்து வாழ்வாயென்றும்
உணவூட்டி உரமூட்டி உறவுள் ஒன்றாய்
மணம்வீசி நின்றவளே மகிமை பெற்றாய்.

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலடி,
2ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

(3118)

அன்புக்கணவர்
**முத்துசாமி.**

# சிவில் அதிகாரங்களைப் படையினர் கையிலெடுப்பதே குழப்பங்களுக்குக்காரணம்

## வட.கடற்றொழிற் சமாசச் செயலாளர்

சிவில் அதிகாரத்தைக் கையில் எடுக்கமுயல்வதே இத்தனை குழப்பங்களுக்கும் காரணம் என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கச் சமாசத்தின் செயலாளர் சூரியகுமார் இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவிற்கு விளக்கமளித்துள்ளார். நேற்றுமுன்தினம் இவர்களைச் சந்தித்த அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், பொலிசார் செய்ய வேண்டிய சிவில் கடமைகளை படையினர் தம் கைகளில் எடுத்து அவற்றை கையாள நினைப்பதும் அது தொடர்பாக மக்கள் உணர்வுகளை வெளிப்படுத்தும் போது அவற்றை ஆயுத அடக்குமுறைகள் மூலம் அடக்கி மழுங்கடிக்க முயல்வதுமே இத்தகைய மக்கள் மற்றும் படையினர் இடையேயான குழப்பங்களுக்கு காரணம் எனவும், இவ்வாறான மக்களின் சிவில் நிர்வாக விடயத்தில் பொலிசாருக்கு பதிலாக படையினர் ஈடுபடுவது தமது அடிப்படை மனிதவுரிமை மீறல் என சுட்டிக்காட்டியுள்ளார். அத்துடன் இத்தகைய இராணுவத்தின் நடவடிக்கைகளை சர்வாதிகார நடவடிக்கைகளாகவே கருதுகின்றோம் எனவும், புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் இவ்வாறு நடவடிக்கைகள் எமது தாயகத்தில் எம்மில் திணிக்கப்படுவதை நாம் ஒரு போதும் அனுமதிக்கப்போவதில்லையென அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.(33)

## பயிரமுது இயற்கை உரம் உற்பத்தி

வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணையில் பயிரமுது இயற்கை உரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. இவ் வியற்கை உரமானது வெளிமாவட்டங்களுக்கும் விநியோகப்படுத்தப்பட்டு வருகின்றது.

மனித பாவனையின் பின் கிடைக்கும் கழிவுப்பொருட்களையும், கால்நடைகளின் கழிவுப் பொருட்களையும் மூலப் பொருட்களாகக் கொண்டு உற்பத்தி செய்யப்படுவதால் எமது இயற்கை சூழலையும் பாதுகாப்புடன் பயிரின் வளர்ச்சியையும் அதிகரிக்கும் நோக்குடன் உற்பத்தி செய்வதாக பொருண்மிய மதியுரையக செய்தி குறிப்பிடுகின்றது. (05)

## படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அராலி மத்தியில் பலமாக வீசிய காற்றினால் சரிந்து வீழ்ந்த வீட்டினுள் அகப்பட்டு ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நடந்துள்ளது. வைரவநாதன் சில்வெஸ்ரர் (வயது 37) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

## கால எல்லை நீடிப்பு

கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த இராணுவத்தில் இருந்து தப்பி வந்தோரை உத்தியோகபூர்வமாகப் படையில் இருந்து விலக்கிவிடுவதற்கான திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 28ஆம் திகதிவரை இந்த நீடிப்பு செய்யப்பட்டுள்ளது. இதுவரை கம்பஹா மாவட்டத்தில் இராணுவத்தில் இருந்து தப்பிவந்த 1552பேர் நிரந்தரமாக விலகிக் கொள்ளும் பட்டியலில் தம்மை பதிவு செய்துள்ளனர்.

இதில் இராணுவ நிரந்தர சேவையின் 414பேரும் தற்காலிக சேவையின் 106 பேரும் இராணுவ சேவையிலிருந்து நிரந்தரமாக விடுவிக்கப்பட்டுள்ளனர். (32)

## 12ஆம் ஆண்டு நினைவு தினம்



வீரச்சாவு 28.10.1991

### வீரவேங்கை - மாமன்னன்

**துரை - சிறிசங்கர்**

வேங்கைகளின் அணிதனிலே
வீரமுடன் இணைந்திட்ட - மாமன்னா!
எங்கள் மனங்களுன்னை
எப்படி மறக்குமப்பா?

28.10.2003 நாளை இல.41 ஜெகநாதன் குடியிருப்பு காரியாலை நாகபடுவான் ஞானசேகரம் நாகராணி இல்லத்தில் நடைபெறும் நினைவு தினத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார்,உறவினர், நண்பர்கள் சகபோராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

என்றும் உன் நினைவில்

துரைசோதி குடும்பம்,
ஜீவரட்ணம் குடும்பம்,
சிவலிங்கம் குடும்பம்,
சூரியகலா குடும்பம்,
மனோகரன் குடும்பம்,

யசோதா குடும்பம்,
சிறிதரன் குடும்பம்,
பிரபாகரன் குடும்பம்,
சிறிகுமார் குடும்பம்,
லெனின் (தம்பி)

(3116)


புதிய இடத்திற்கு நாங்கள் வருகின்றோம்

இதுவரை காலமும் இல:—305,கஸ்தூரியார் வீதியில் அமைந்திருந்த

வீ.எம்.கே. ஜுவலர்ஸ்



27.10.2003திங்கட்கிழமை இன்று முதல் யாழ் பஸ் நிலையம் முன்பாக இல:-105 மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்த புதிய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதனை வாடிக்கையாளர்கள், நண்பர்கள்,ஆதரவாளர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

வீ எம் கே

வீ.எம்.கே. ஜுவலர்ஸ்

இல:-105,மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். T.P 0777-723021 0602-212989 கண்டி வீதி, சாவகச்சேரி.

SM Graphics (சி-8593)

# ஈராக்கில் படையினர் நிலைகொண்டிருப்பதனை ஆட்சேபித்து வெள்ளை மாளிகைமுன் ஆர்ப்பாட்டம்

## - பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பு

(வாஷிங்டன்)

**ஈராக்கில் அமெரிக்க தலைமையிலான படையினர் நிலை கொண்டுள்ளதை ஆட்சேபித்து பல்லாயிரக்கணக்கான மக்கள் நேற்று முன்தினம் வெள்ளைமாளிகை முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியுள்ளனர்.**


ஈராக் மீதான யுத்தம் முடிவடைந்துவிட்டது என்று அமெரிக்க சனாதிபதி புஷ் பிரகடனம் செய்ததன் பின்னர் அமெரிக்காவில் இடம்பெற்ற மிகப் பெரியளவிலான ஈராக் ஆதரவிலான பேரணி இதுவாகும்.

ஈராக்கில் இருந்து அமெரிக்க துருப்பினரை திருப்பி அழைக்குமாறு கோரும் சுலோக அட்டைகளை தாங்கிய ஆர்ப்பாட்டக்காரர்கள் வாஷிங்டன் நினைவு தூபிக்கு அருகில் கூட்டம் ஒன்றை நடத்திய பின்னர் வெள்ளை மாளிகையை நோக்கி அணிவகுத்துச் சென்றனர்.

அமெரிக்க துருப்பினரின் குடும்ப உறுப்பினர்களும் சமாதானக் காப்பாளர்களும் ஈராக்கில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப்படை வீரர்கள் நாளுக்கு நாள் கொல்லப்பட்டு வருவதையடுத்து அமெரிக்காவில் யுத்த எதிர்ப்புப் பிரச்சாரம் வலுவடைந்து வருகின்றது.



இருவாரங்களுக்கு முன் தலைப்பகுதி ஒட்டியநிலையிலிருந்த எகிப்திய இரட்டைக் குழந்தைகள் பிரிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.



பாக்தாத்துக்கு அருகில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற விபத்தில் எரியும் அமெரிக்க உலங்கு வானூர்தியையும் காயப்பட்ட படையினரை ஏற்றிச் செல்லும் வேறொரு உலங்கு வானூர்தியையும் படத்தில் காண்க.



சதாம் ஆட்சியின்போது அரசியல் கைதிகளின் சிறைக் கூடமாகக் கருதப்பட்ட கட்டடத்தில் இருந்து வேறிடத்துக்கு அமெரிக்கப் படையினரால் கொண்டுசெல்லப்படும் ஈராக்கியக் கைதிகள்.

# பொடோவை மாற்றியமைக்கும் சட்டம் எவ்வேளையிலும் அமுலுக்கு வரலாம்

## -மத்திய அரசு அறிவிப்பு

(புதுடில்லி)

"பொடோ" சட்டத்தை மாற்றியமைப்பதற்கான அவசர சட்டம் விரைவில் அமுல்ப்படுத்தப்படும் என்று இந்திய மத்திய அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்திய சனாதிபதி அப்துல் கலாம் தனது வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக்கொண்டு நாடுதிரும்பியிருப்பதனால் எந்த நேரத்திலும் உத்தேச அவசர சட்டம் அமுலுக்கு வரலாம் என்று அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்தக் கொண்டுவரப்பட்டபொடோ சட்டத்தை சில மாநில அரசுகள் தவறான முறையில் அரசியல் பழிவாங்கலுக்குப் பயன்படுத்தி வருவது தெரியவந்ததை யடுத்து பொடோ சட்டத்தில் மாற்றம் கொண்டுவர மத்தியஅரசு தீர்மானித்துள்ளது.

தமிழகத்தில் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் வை.கோ. உட்பட அவரது கட்சியினரும் மற்றும் பலரும் பொடோ சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஈராக்கில் நிலைகொண்டுள்ளோர் அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களே!

ஈராக்கின் பெரும்பாலான மக்கள் அமெரிக்கப் படைவீரர்களை ஆக்கிரமிப்பாளர்கள் என கருதுகின்றனர்.

இந்தத் தகவல் புத்திஜீவிகளைக்கொண்டு ஈராக்கிய ஆய்வு மையத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி 67 வீத மக்கள் அமெரிக்கர்கள் ஆக்கிரமிப்பாளர்கள் எனக் கருத்து வெளியிட்டுள்ளார்கள். 15வீதமானோர் அமெரிக்கர்களை விடுதலை வீரர்கள் எனக் கூறியுள்ளனர். 10வீதமான மக்கள் அமெரிக்க வீரர்கள் அமைதிக்காப்பு வீரர்கள் எனத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை நாட்டின் 37 வீதமான மக்கள் தமக்கு இஸ்லாமிய ஆட்சி அமைப்பே வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர். 30 வீதமானோர் இஸ்லாமிய மக்களாட்சியே தமக்குத் தேவை என குறிப்பிட்டுள்ளனர்.

# ஐ.நா. ஆயுத ஆய்வாளர் குழுவினர் ஈரான் பயணம்

இரகசியமாக அணுவாயுத தயாரிப்பில் ஈரான் ஈடுபடுவதாகக் கூறப்படுவதை சரிபார்ப்பதற்காக ஆறு ஐ.நா.ஆயுத ஆய்வாளர்கள் தெஹ்ரானுக்கு சென்றுள்ளனர். இதனிடையே ஈரானின் அணுசக்தி நடவடிக்கை பற்றிய தகவல்களை சர்வதேச அணுசக்தி ஏஜென்சிக்கு தெரிவிக்கக் கூடாது என்று வலியுறுத்தி நூற்றுக்கணக்கான மக்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். அணுகுண்டு தயாரிக்க பயன்படுத்தும் வகையில் யுரேனியம் செறிவூட்டப்படுகின்றதா என்பதை ஆயுத ஆய்வாளர்கள் கண்டறிவர்.

# சிரியா மீது தாக்கினால் இஸ்ரேலுக்குப் பதிலடி கிடைக்கும்

## வெளிநாட்டு அமைச்சர் எச்சரிக்கை

இஸ்ரேல் சிரியா மீது தாக்குதல் நடத்தினால் சிரியா பதிலடி கொடுக்கும் என்று சிரியாவின் வெளிநாட்டு அமைச்சர் பாருக் அல் -சாரா பிரிட்டனின் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கோலான் மேட்டு நிலப் பகுதியில் அமைந்துள்ள இஸ்ரேலியக் குடியேற்றத் திட்டங்கள் மீது தாக்குதல் நடத்தப்படும் என்றும் சிரிய அமைச்சர் இப்பேட்டியில் எச்சரிக்கை செய்துள்ளார்.

இதுவரை பயன்படுத்தாத உத்திகளை சிரியா பயன்படுத்தும் என்று குறிப்பிட்ட அமைச்சர் அல்-சாரா சிரியா மீண்டும் தாக்கப்பட்டால் அந்நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள் என்று கூறியுள்ளார்.

# முஷாரவ்வின் இராணுவ ஆட்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகளின் போராட்டம் அதிகரிப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஸ் முஷாரவ்வுக்கு எதிரான கிளர்ச்சியை எதிர்க்கட்சிகள் தீவிரப்படுத்தியுள்ளன.

நேற்று முன்தினம் இஸ்லாமாபாத்தில் பதினைந்து கட்சிகள் அடங்கிய சனநாயக மீட்புக் கூட்டணி முதலாவது மாபெரும் பேரணியை நடத் தியது.

இந்தக் கூட்டணி ஆட்சியில் சனநாயகக்கொலை செய்த ராணுவ ஜெனரல் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூட்டணியின் தலைவர் மக்துஅமீன் ஹாகீப் கூறினார்.

நீதிபதிகளும் ராணுவ ஆட்சி அமைப்பதற்கு பொறுப்பானவர்கள் என்பதால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



மக்கள் கருத்தைக்கோரும் வகையிலான பதாகையை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடும் தாய்வான் வர்த்தகர்கள்.



தென்கொரிய தலைநகர் -சியோலில் நடைபெற்ற யுத்த எதிர்ப்புப் போராட்டத்தின்போது ஜோர்ஜ் புஷ் தென்கொரிய சனாதிபதி ரோ-மூ ஹயுன் யோன்றோரின் முகமூடிகளை அணிந்து காணப்படும் ஆர்ப்பாட்டக்காரர்கள்.

# பத்திரிகை நிறுவனத்தில் பொலிசார் புகுந்து அடாவடி!

(ஹராரே)

சிம்பாவேயில் அரசாங்கத்தினால் தடைசெய்யப்பட்ட ஒரேயொரு தனியார் பத்திரிகை நிறுவனத்தை மீண்டும் செயற்படுத்துவதற்கு அனுமதிக்குமாறு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியபோது பொலிசார் மேற்படி பத்திரிகை நிறுவனத்தின் அலுவலகத்தில் புகுந்து நீதிமன்ற உத்தரவை மீறி பத்திரிகை அச்சிடப்படுவதை தடுத்து நிறுத்தியுள்ளனர்.

ஆறு வாரங்களுக்கு முன்னர் அரசாங்கத்தினால் மூடப்பட்ட இப்பத்திரிகை நிறுவனம் கடந்த வெள்ளியன்று நீதிமன்ற உத்தரவொன்றை அடுத்து இயங்குவதற்கு ஆயத்தமான போது அங்குசென்ற ஆயுதம் ஏந்திய பொலிசார் 18 செய்தியாளர்களையும் நிர்வாக உத்தியோகத்தர்களையும் கைது செய்து தடுத்துவைத்துள்ளனர். நேற்று முன்தினம் பத்திரிகையின் முதல் பதிப்பு அச்சிடப்பட்ட நிலையில் பொலிசாரின் இந்த அத்துமீறல் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

# அநுராவின் தலைமைத்துவக் கனவு

# நனவாகாது இருப்பதேன்?



லண்டனிலிருந்து பட்டம் பெற்று சிறிலங்காவுக்குத் திரும்பிய அநுரா பண்டாரநாயக்க தாம் அரசியலில் பெரும் மாற்றத்தையும் கட்சிக்குள் புரட்சி யையும் ஏற்படுத்தவும் தம்மால் முடியும் என்ற கனவுடன் வந்திருக்கக்கூடும். அவ்வேளையில் அவருக்கு அப்போதிருந்த இடது சாரிகளுடன் கசப்புணர்வே காணப்பட்டது. அதை வெளிக்காட்டும் வகையில் அவர் இடது சாரிகளின் கோட்டையாகக் கருதப்பட்ட ருவன்வல தொகுதியில் பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தினார். இதற்கு முதலில் சிறிமாவோ அம்மையார் அனுமதி மறுத்தபோதும் அவர் தொடர்ந்தும் நச்சரித்ததால் பின்னர் அனுமதித்தார்.

அவர் அக்கூட்டம் நடத்திய அன்று பாராளுமன்றம் கூடும் தினமாகவும் இருந்தது. சிறிமாவோ கூட்டத்துக்கு அனுமதிக்காமல் பாராளுமன்றம் சென்றார். ஆனால் அநுரா பத்திரிகையாளர் ஒருவர் மூலம் அனுமதியைப் பெற்றார். கூட்டம் அமைதியாக முடிந்து அநுராவும் வீடு திரும்பினார்.

அந்நாட்களில் பண்டாரநாயக்க குடும்பம் பற்றி திரைமறைவில் நூல் வெளியிடுபவராக சிறிமாவோ அம்மையாரின் பிரத்தியேகப் பாதுகாப்பு அதிகாரியாக இருந்த சந்திரசேகர இருந்தார். அவர் எழுதியது போன்று அநுரா பண்டாரநாயக்க அவரின் தந்தை பண்டாரநாயக்க போன்று ஒரு புரட்சிவாதி எனக் குறிப்பிட்டுள்ளார். ஆயினும் பண்டாரநாயக்கா மோதியது பண்டாரநாயக்காவுடனேயே. அநுரா மோதியது அம்மாவான சிறிமாவோவுடன் இன்று அவர் மோதவிருப்பது அக்காவான சந்திரிகாவுடன் இதிலிருந்து எது எவ்வாறு முடியும் என்பதைக் காலம் சொல்லும்.

எவ்வாறெனினும் தமது தந்தையால் கட்டிவளர்க்கப்பட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி அநுராவுக்குக் கிடைக்காமல் செய்யும் நடவடிக்கைகளும் நடந்தவண்ணம் இருக்கின்றன. அநுராவுக்குக் கிடைக்க வேண்டியது கிடைக்காது விடுதல் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றது.

இது அன்று கலவானைத்தொகுதி இடைத்தேர்தலில் இருந்து தொடங்குகின்றது. அன்றைய ஐக்கிய முன்னணியின் கீழ் இத்தொகுதியில் சிறில.சு.க. வேட்பாளராகப் போட்டியிட சந்தர்ப்பம் கிடைக்க வேண்டியது அநுராவுக்கே. எனினும் அப்போதைய கூட்டணி அதற்கு ஆட்சேபம் தெரிவித்தது அநுரா போட்டியிடவில்லை. அடுத்து அம்மையாரின் குடியுரிமை பறிக்கப்பட்டதனால் அவருக்காக கட்சித் தலைமைத்துவம் அநுராவின் கைக்குவர இருந்தவேளை விஜயகுமாரதுங்க-சந்திரிகா இலங்கரத்ன கூட்டு அதனையும் எதிர்த்தது. அம்மையார் கூட்டணிக்கு ஆதரவளித்தார் அநுரா தனிமையானார்.

அடுத்த கட்டம் 1988ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலில் சிறிமாவோ தோல்வியுற்ற போது கட்சியை உத்தியோக பூர்வமாக தமது கைகளுக்கு கொண்டுவர முயன்றார். அவ்வேளையிலும் லண்டனில் இருந்த சந்திரிகாவை அழைத்துக் கட்சிப் பொறுப்பை கையளிக்கக் கட்சி எண்ணியது. அதற்கும் அம்மையார் ஆதரவளித்தார் அநுரா நிர்க்கதிக்குள்ளானார். அதனால் கட்சியைவிட்டுப் பிரிந்துசென்றார். இந்த வகையில் 1982ஆம் ஆண்டு முதல் 94 வரை அநுராவுக்கு எந்தத் தலைமைத்துவப் போட்டிக்கும் இடம் கிடைக்காமல் விட்டது. 1999இல் அவர் ஐ.தே.க.வில் இருந்தபடியால் சனாதிபதித் தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கிட்டவில்லை. 2005இலும் அதேதான் நடக்குமா? என்பதே அநுராவின் இன்றைய கேள்வி?

அவர் லண்டனிலிருந்து பட்டதாரியாகத் திரும்பும்போது தாம் சிறிலங்கா சு.க.வின் தலைவராக வரும் கனவுடன் இருந்தார். அன்றிலிருந்து கட்சியின் தலைமைப் பொறுப்பைக் கைப்பற்றவும் பல மாற்றங்களைச் செய்வதற்கும் புதியவர்களை கட்சிக்குள் இணைப்பதற்கும் கட்சிக்குள்ளும் குடும்பத்துக்குள்ளும் பல போராட்டங்களை நடத்தினார். இவரின் தந்தையான எஸ் டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவும் பண்டாரநாயக்க குடும்பத்துள் சிக்கியிருக்கும் அரச ஏகாதிபத்தியத்தை முடிவுக்குக்கொண்டு வரப் போராடினார். அதன் மூலம் சிறில.சு.கட்சி உருவானது. அநுரா போராடுவதும் குடும்பக் கட்சியான சுதந்திரக்கட்சிக்குள் மாற்றத்தைக் கொண்டுவரவே அன்று பண்டாரநாயக்சவுக்குத் தடையாக இருந்தவர் அவரின் தந்தை. இன்று அநுராவுக்குத் தடையாக இருப்பது அக்காவும் மறைந்த அம்மாவும்.

ஆயினும் தவறு அக்காவுடையதும் அம்மாவுடையதும் மட்டுமல்ல, அநுராவுக்கு இவ்வாறெல்லாம் நடப்பது அவரின் தவறாலேயே.

சிறிமாவோ அம்மையாரின் குடியுரிமை பறிக்கப்பட்டபோது அதனை விமர்சனம் செய்யாமல் அம்மாவின் ஆசீர்வாதத்தாலும் தலைமையிலும் அவரை முன்வைத்து 1982ஆம் ஆண்டு தேர்தலில் நின்றிருந்தால் அவர் வெற்றிபெற்று சனாதிபதியாகியிருப்பார். அவர் அவ்வாறு செய்யாது அம்மா தேர்தலில் நிற்க முடியாது என பகிரங்கமாக சொல்லித் திரிந்து அம்மாவின் வெறுப்புக்கும் ஆளாகி கட்சியின் அதிகாரத்தைப் பலாத்காரமாக பெற முயன்றார். இதுபோன்றே 1988இலும் சிறிமாவோவுக்கு எதிராக அவர் செயற்பட்டார். ஆயினும் சந்திரிகா அவற்றுக்கெல்லாம் எதிர்மாறாகச் செயற்பட்டு கட்சியின் அதிகாரத்தைதான் கைப்பற்ற முயன்றார். அவர் அநுராவை விட புத்திசாதுர்யத்துடனும் தந்திரோபாயமாகவும் செயற்பட்டு அம்மாவைக் கைக்குள் போட்டுக்கொண்டு அலுவல் பார்த்தார். அதில் வெற்றியும் கண்டு அம்மாவின் ஆதரவாளர்களையும் அவர் தன் வசமாக்கினார். அவர் தந்திரோபாயம் செய்தார் என்பது 1994ஆம் ஆண்டில் சிறிமாவோவுக்குப் பிரதமராகவோ சனாதிபதியாகவோ போட்டியிட முடியாதவாறு செய்தமையிலிருந்து புலனாகும்.

இதனால் சிறிமாவோ, சந்திரிகா மீதும் வெறுப்புத் தோன்றினாலும் சந்திரிகா, அம்மாவைப்பற்றி பகிரங்கமாக விமர்சிக்கவில்லை. அனைத்து மோதலும் பிரச்சினைகளும் றோஸ்மீட் இல்லத்தில் நான்கு சுவர்களுக்குள்ளேயே பாதுகாக்கப்பட்டு பொறுத்துக் கொள்ளப்பட்டது.

அநுராவுக்கு அவ்வாறு பொறுமை இருக்கவில்லை. இன்றும் அக்காவை அரசியலில் இருந்து நீக்கவும் ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்ந்து அரசமைக்கவுமே அநுரா முயற்சி செய்கிறார். அடுத்துவரும் சனாதிபதித் தேர்தலில் சந்திரிகா போட்டியிடமுடியாது என்பது அவருக்குத் தெரியும். நாட்டு மக்களுக்கும் தெரியும். இவ்வாறான சந்தர்ப்பத்தில் அநுரா செய்யவேண்டியது, சந்திரிகா அரசியலிருந்து ஓய்வுபெறவேண்டியிருக்கும் எனக்கூறி அவரின் தலைமைத்துவம் பற்றி விமர்சிப்பதல்ல. அக்காவின் தலைமை



இன்றுபோல நாளையும் தேவை எனக்கூறிக் கொண்டு செய்யக்கூடிய அனைத்து வேலைகளையும் செய்து அவரது அரசியலை பலம்பெற வைக்க வேண்டும். சனாதிபதிக்கு அவரது அதிகாரங்களில் நடவடிக்கைகளில் வரையறையிருக்கின்றது. அநுராசெய்ய வேண்டியது அவ்வாறான அதிகாரத்தை அவரின் ஆசீர்வாதம் மூலமே பெற்றுக்கொள்வதும் அதன் மூலம் சந்திரிகாவை சுற்றியுள்ள ஏனைய கட்சித் தலைவர்களை வசப்படுத்திக் கொள்வதே. அதன்போது கட்சியதிகாரங்கள் தானாகவே அநுராவிடம் வந்து சேரும். அதைத் தடைசெய்ய சந்திரிகாவுக்கும் முடியாது போகலாம். அப்படியாயின் சிறிமாவோவுக்கு ஏற்பட்ட நிலை சந்திரிகாவுக்கும் ஏற்படும்.

அவ்வாறு செய்வதற்கான தந்திரோபாயம் அநுராவிடம் கிடையாது. அவரைச் சுற்றியுள்ளவர்களுக்கும் கிடையாது. சிறிமாவோவின் குடியுரிமை பறிக்கப்பட்டபோது அநுரா கட்சியிலிருந்து பிரிந்து சென்றிருக்கக்கூடாது. அதைவிடுத்து அவர் ஐ.தே.க.வில் இணையாது சந்திரிகாவைப்போல வெளிநாடுசென்றிருந்தால் 2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் சந்திரிகாவின் கட்சி தோல்வியுற்ற போது சு.கட்சி அநுராவைத் தட்டில் வைத்து ஏந்தியிருக்கும்.

சென்றதைப்பற்றிக் கலங்காமல் இருப்



பதைக் கவனத்தில் எடுத்தல் என்பது போல அனுரா செயற்படுவாரெனில் அதாவது "அடுத்த தேர்தலில் தமது அக்காவை தோல்வியுறச் செய்ய நினைப்பவர்கள் தான் இருக்கும்வரை நடக்காது" எனவும் "அடுத்த தேர்தலில் அக்கா சந்திரிகாவுக்கே வெற்றி" "ஜே.வி.பி. கூட்டணியில் அக்கா எடுத்த முடிவு சரியானதே" "நான் அக்காவின் கூற்றை மதிக்கிறேன்" என்றவாறு அநுரா முழங்க வேண்டும். அவ்வாறு அநுரா செய்தால் அநுராவுக்கு மக்களின் செல்வாக்கும் கிடைத்துக் கட்சியிலும் தலைமைப்பொறுப்புச் சென்றடையும்.

அநுரா தானாகவே அரசியலில் இருந்து தூக்கியெறியப்படவில்லை. காலந்தோறும் அவரை தள்ளிவிடவே முயற்சிகள் நடந்துள்ளன. 1993லும் அநுரா ஐ.தே.க.வுக்கு தள்ளப்பட்டாரேயொழிய அவராகச் செல்லவில்லை. ஐ.தே.க.விலும் அவருக்கு ஆதரவு இருந்தது. எப்போதென்றால் பிரேமதாசாவுக்கு எதிராக லலித்தும் காமினியும் குரல் எழுப்பியபோதே. அப்போது பிரேமதாசா தமது கைப்பட அநுராவுக்கு எழுதியதாவது, எமது கட்சிக்குள் இணைந்தால் பிரதமர் பதவியை வழங்குவேன் என்று. எனினும் அநுரா தமது சிறில.சு.க.வை காட்டிக்கொடுக்க மனமின்றி அதனை நிராகரித்தார். ஆகவே அநுரா பின்னர் கறிவேப்பிலை போல தூக்கியெறியப்பட்டார்.

அரசியல் என்பது அதுவே இதனை நன்கு உணர்ந்து செயற்படாவிட்டால் அநுரா ஒருநாளும் வெற்றிபெறமுடியாது. தமது தவறுகளை உணர்ந்து கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நடந்துகொள்வாராயின் அவரது முன்னைய கனவு நனவாகும்.

உப்புல் ஜோசப் பர்ணாந்து
லங்காதீப
மொழியாக்கம் : வடிவேல்

♥ ♥ ♥

---

## 1500க்கும் மேற்பட்ட இலங்கையர்கள் லெபனான் சிறைகளில் பரிதவிப்பு!

லெபனானில் 1500 க்கும் அதிகமான இலங்கையர்கள் லெபனான் சிறைக் கூடங்களிலும், முகாம்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். லெபனானிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் திறமையற்ற செயற்பாடுகளினாலேயே அங்கு தொழில் புரியும் இலங்கையர்கள் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர் என வெளிநாட்டில் வேலை புரிவோர் நலன்புரி அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன குற்றம்சாட்டியுள்ளார்.

அத்துடன் பெய்ரூட் அரச வைத்தியசாலையில் 07 பேரின் சடலங்கள் அழுகிய நிலையில் தற்போதும் இருக்கின்றன.

சிறையில் அடைக்கப்பட்டவர்களில் அதிகமானவர்கள் விஸா முடிவடைந்து, தொடர்ந்து லெபனானில் தங்கியிருந்தபோது கைதானவர்களே.

இதனால் லெபனானிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் செயற்பாடுகள் குறித்தும் சிறைகளில் வாடுபவர்களின் நிலை குறித்தும் அறிக்கையொன்றை தொழில்வாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவிடம் கையளித்துள்ளேன் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

## காரைநகரில் மீளக்குடியமர்ந்தோர் நலிவுற்ற நிலையில் வாழ்க்கை

காரை நகரில் தற்பொழுது மீளக்குடியமர்ந்துள்ள 10,280 பேரில் 4434பேர் வறுமை காரணமாக மிக நலிவுற்ற நிலையில் வாழ்ந்து வருவதாக அகதிகள் புனர்வாழ்வு நிர்வாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு வாழ்ந்து வருபவர்களில் 549 பேர் விதவைகளாக வாழ்ந்து வருகின்றனர். இடம் பெயர்வுகளால் தம் சொத்துக்களை இழந்தும் சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாமலும் வாழ்ந்துவரும் மக்களுக்கு போதிய அளவு உதவிகளோ நிவாரண மற்றும் சுயதொழில் கொடுப்பனவுகளோ எந்த ஒரு அமைப்பாலும் கொடுக்கப்படாமையால் இவர்கள் பெரும் அவலத்திற்குள் வாழ்ந்துவருவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (33)

## க.பொ.த. (சா/த) பரீட்சையில் தோற்றும் மாணவர் கவனத்திற்கு!

டிசம்பர் மாதத்தில் இடம்பெறும் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் அக்டோபர் 31ஆம் திகதிக்கு முன்னர் ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்குமாறு திணைக்களத்தின் ஆணையாளர் விஜயரணசிங்க கூறியுள்ளார்.

பரீட்சை நெருங்கும் காலம் வரை காத்திருக்காது முன் கூட்டியே மாணவர்களின் விண்ணப்பங்களை அனுப்பி வைப்பதன் மூலம் வீண் தாமதங்களைத் தவிர்க்கலாம் என்றும் பாடசாலை அதிபர்களிடம் ஆணையாளர் கோரியுள்ளார் பாடசாலை மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டைகளை தாமதமில்லாது கிடைப்பதற்கான விசேட திட்டம் மாவட்டம்தோறும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தை 2004ஆம் ஆண்டு இறுதிக்குள் நாடு முழுவதும் விஸ்தரிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பாடசாலை மாணவர்களுக்குத் தேசிய அடையாள அட்டையின் முக்கியத்துவம் பரீட்சைகள் நெருங்கும் போது மட்டும் முக்கியத்துவம் பெறும் விடயமல்ல. 16வயது பூர்த்தியானதுமே இதன் தேவை அத்தியாவசியமாகின்றதென்றும் ஆணையாளர் கூறியுள்ளார்.

## கொள்ளை

ஆட்டோவில் பயணம் செய்து கொண்டிருந்தவரை வாகனமொன்றில் பின் தொடர்ந்தோர் வாகனத்திலேயே கடத்திக் சென்று தாக்கிக் காயப்படுத்தி கட்டிவைத்துவிட்டு கொழும்பு சீதுவைக் கடற்கரையில் விட்டுச் சென்றுள்ளனர்.

இவரிடம் இருந்து 7 இலட்சத்து 91ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும் பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

# வடக்கு–கிழக்கை மீளக் கட்டியெழுப்ப 649 மில்லியன் டொலர்கள் சேகரிப்பு!

## உதவி வழங்கும் நாடுகள், அமைப்புக்கள் அறிக்கை

**இலங்கையின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு அளித்துவரும் அதே சமயம், இருதசாப்த காலப் போரினால் பாதிப்படைந்த வடக்கு, கிழக்குப் பகுதிகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக இதுவரை 649 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளதாக இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளும், சர்வதேச நிதி நிறுவனங்களும் அறிவித்திருக்கின்றன.**

இலங்கைக்கு வழங்கிய நிதியுதவி சம்பந்தமாக உலக வங்கி,ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம், உலக உணவுத்திட்டம், ஐரோப்பிய ஆணைக்குழு ஆகிய அமைப்புகளும், அவுஸ்ரேலியா, பிரான்ஸ், ஜேர்மனி,இத்தாலி, ஜப்பான், நெதர்லாந்து, சுவீடன், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளும் . இணைந்து விடுத்திருக்கும் கூட்டறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த கூட்டறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

இலங்கையில் நிரந்தர அமைதியொன்றை ஏற்படுத்தவும், வறுமை ஒழிப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்தவும் இப்போது சிறந்த சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

நாட்டில்போரினால் கடுமையாகப் பாதிக் கப்பட்ட வடக்கு, கிழக்கின் பிரதேசம் படிப்படியாக வழமை நிலைக்குத் திரும்பிக்கொண்டிருக்கின்றது.

பெரும்பாலான மக்கள் தாம் இடம் பெயர்ந்த இடங்களிலிருந்து சொந்த இடங்களுக்கு வருவதில் கூடுதல் கவனம் செலுத்துகின்றனர்.

வடக்கில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் நிலப் பிரதேசம் 35 வீதத்தினால் அதிகரிக்கின்றது. 2000 ஆம் ஆண்டு 84 ஆயிரம் மெற்றிக் தொன்னாகஇருந்த வடக்கு,கிழககின் நெல்விளைச்சல் இவ்வாண்டு முற்பகுதியில் 4இலட்சம் மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளது.

அதேபோல் 2000ஆம் ஆண்டில் 44 ஆயிரம் மெற்றிக் தொன்னாக இருந்த மொத்த மீன்பிடி வீதம் கடந்த ஆண்டு 85 ஆயிரம் மெற்றிக் தொன்னாக அதிகரித்துள்ளது.

வடக்கு, கிழக்கைக் கட்டியெழுப்பும் பணிக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 114.9 மில்லியன் டொலர்கள், உலகவங்கி 202 மில்லியன் டொலர்கள், ஐரோப்பிய ஆணைக்குழு 74.3 மில்லியன் டொலர்கள்,ஐ.நா. உதவி அமைப்புக்களான யு.என். டி.பி. யு.என். எச்.சி.ஆர், யுனிசெவ், உலக உணவுத்திட்டம் என்பன 42.83 மில்லியன் டொலர்கள்,ஜப்பான் 31.5மில்லியன் டொலர்கள், ஜேர்மனி 58.5 மில் லியன் டொலர்கள், அவுஸ்திரேலியா 5.492 மில்லியன் டொலர்கள், நெதர்லாந்து 11.343 மில்லியன் டொலர்கள், சுவீடன் 21.1 மில்லியன் டொலர் கள், அமெரிக்கா 10.6 மில்லியன்டொலர்கள், பிரிட்டன் 48 மில்லியன் டொலர்கள், நோர்வே 9.876மில்லி யன் டொலர்கள் கனடா 7.65 மில்லியன் டொலர்கள் இத்தாலி 6 மில்லி யன் டொலர்கள் பிரான்ஸ் 0.175 மில்லியன் டொலர்கள் வழங்கியுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## மருத்துவக்குழு வருகை

கொரியாவில் வெளி நாடுகளுக்கான மருத்துவ சேவைகள் குழு மீண்டும்எதிர்வரும் 3ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.நவம்பர் மாதம் 9ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கவுள்ள இவர்கள் யாழ்ப்பாணத்துக்குச் சென்று இலவச மருத்துவ சேவைகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலங்கைக்கு மூன்றாவது தடவையாக இக் குழு விஜயம் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

### -அரசின் வரவு- செலவுத்திட்டம் குறித்த-

## புதிய கருத்துக்களை அறிவிக்க எதிர்க்கட்சித் தலைவர் கோரல்

அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ள வரவுசெலவுத் திட்டம் சம்பந்தமாக புதிய யோசனைகள் இருப்பின் தமக்கு அறிவிக்குமாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற அங்கத்தவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இவ்வருடம் இடம் பெற்ற அமைச்சுக்கள், அரச திணைக் களங்கள் போன்றவற்றின் முறைகேடுகள் இலஞ்ச ஊழல்கள், அரசியல் பழிவாங்கல் என்பவை தொடர்பான முழு விபரங்களையும் அறிவிக்குமாறும் எதிர்க்கட்சித் தலைவர் கேட்டுள்ளார்.

### - ஆராட்சிக் கட்டுவப் பகுதியில் -

## வீடுகள் எரிப்புத் தொடர்பாக 4 பேர் கைதாகித் தடுத்துவைப்பு

ஆராட்சிக்கட்டுவப் பிரதேசத்தில் கடந்த வெள்ளியன்று இடம்பெற்ற எரியூட்டல் சம்பவங்கள் தொடர்பில் நால்வர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதில் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். ஏனைய மூவரும் கிராம மக்களால் பிடிக்கப்பட்டுப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

அன்றைய தினம் இடம்பெற்ற எரியூட்டல் சம்பவங்களில் 6வீடுகள் சேதமாக்கப்பட்டன. இதில் 4 வீடுகள் முழுமையாக எரியுண்டன. சம்பவத்தின் பின்னணியில் அரசியல் காரணங்கள் இருந்ததாக கிராமமக்கள் கூறுகின்றனர் எனினும் பொலிசார் உரிய முறையில் செயற்படவில்லையெனவும அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி "மக்கள் மயம்" பேரணியை ஒட்டியே இந்த எரியூட்டல் சம்பவங்கள் இடம் பெற்றதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (32)

## அரசு வனப் பிரதேசங்களோடு நதிகளையும் அமெரிக்காவிடம் குத்தகைக்கு விட முடிவு!

### சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புக்கள் கண்டனம்

(கொழும்பு)

அரசாங்கம் வனப்பிரதேசங்களை மட்டுமன்றி நதிகளையும் அமெரிக்காவுக்கு குத்தகைக்கு வழங்கப் போவதாக சுற்றாடல் பாதுகாப்பு அமைப்புகள் குற்றம் சுமத்தியுள்ளன. சிங்கராஜவனம் , சிவனொலிபாதமலை, நமுகலநக்கல்ஸ் மலைத்தொடர், கன்னெலிய/நாகியாதெனிய போன்ற இடங்கள் அமெரிக்காவுக்கு குத்தகைக்கு விடப்படவிருக்கின்றன. 30 வருட குத்தகையின்அடிப்படையில்இவை அமெரிக்காவுக்கு வழங்கப்படும். அவற்றில் காணப்படும் மூலிகைகளைக் கொண்டு நோய் நிவாரணிகள் உற்பத்தி செய்யப்படவிருக்கின்றன.

அதேநேரம் இந்த மலைத் தொடர்களில் இருந்து உற்பத்தியாகும் சுமார் 103 நதிகளும் அமெரிக்காவுக்கு குத்தகைக்கு கொடுக்கப்படவிருக்கின்றன இவையாவும் அமெரிக்காவிடம் சிறிலங்கா பெற்ற பெருமளவு நிதியில் இருந்து விடுபடும் முகமாகவே குத்தகைக்கு வழங்கப்படவுள்ளன. (32)

## பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள் மாற்றியமைப்பு

பாடசாலைகள் அபிவிருத்தி குறித்து சுதந்திரமாக இயங்குவதற்காக தற்போது இயங்கிவரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் கலைக்கப்பட்டு அவை அனைத்தும் பாடசாலை அபிவிருத்திச் சபைகளாக மாற்றியமைக்கப்பட்டு வருகின்றன.

கல்வி மனித வள பண்பாட்டு அலுவல்கள் அமைச்சரின் உத்தரவின் பேரிலேயே இம்முயற்சி செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

நாடளாவிய ரீதியில் பரீட்சார்த்தமாக 33 பாடசாலைகளில் இந்தச் சபைகள் முதலில் அமைக்கப்படவுள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆகிய இரண்டு கல்லூரிகள் மட்டுமே இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்பாடசாலை அபிவிருத்திச் சபையில் 19 பேர் இயக்குநர் சபை உறுப்பினர்களாக அங்கம் வகிப்பர்.

## முல்லை கூட்டுறவுச் சங்கங்களின் முன்னேற்றம் தொடர்பாக ஆராய்வு

முல்லை மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் கடந்த வியாழனன்று கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் கூ.அ.உ.ஆணையாளர் சிவமயம் தலைமையில் நடைபெற்றது.

இதில் தற்போது சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன? அதை நிவர்த்தி செய்ய என்ன செய்யலாம் என்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

இக்கலந்துரையாடலில் கூட்டுறவுச் சங்கங்களின் பொதுமுகாமையாளர்கள், தலைவர்கள், களஞ்சிய மேற்பார்வையாளர்கள், தமிழீழ நிர்வாக சேவையின் சார்பாக இசையமுதன், விஜிதரன் ஆகியோரும் கலந்து கொண்டு கருத்துக்கள் வழங்கியமை குறிப்பிடத்தககது. (20)

## கடற்படை பயிற்சி நடவடிக்கைகளால் மீள்குடியேறிய மக்களின் மனநிலை பாதிப்பு!

### மிதிவெடிகளும் பெரும் அச்சுறுத்தல்

காரைநகர்ப்பகுதியில் நிலைகொண்டுள்ள கடற்படையினரின் பயிற்சி நடவடிக்கையால் அப்பகுதி வாழ்மக்களின் மனநிலை மிகவும் பாதிக்கப்பட்டுவருவதாக அகதிகள் புனர்வாழ்வுக்கழகம் கவலை வெளியிட்டுள்ளது. காரைநகரில் வியாவில், கலைந்தாழ்வு, நீலங்காடு, கருங்காலி, மருதபுரம் ஆகிய பிரதேசங்களில் புரிந்துணர்வு உடன்படிக்கையின் பின்னர் மீள்குடியேறி சென்றுள்ள மக்கள் குடியிருப்புக்களைஅண்மித்து படையினர் செய்து வரும் இப்பயிற்சிநடவடிக் கைக்காக ஏவப்படும் எறிகணை மற்றும்வெடி பொருட்களின் சத்தங்கள் இவர்களது மன நிலையை வெகுவாகப் பாதித்திருப்பதாக மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் மீள்குடியேறி வாழ்ந்து வரும் மக்களுக்கு மிதிவெடி அபாயம் பெரும் தாக்கத்தை உருவாக்கியுள்ள தன்மையையும் சுட்டிக்காட்டியுள்ளது. (33)

## மது போதையில் வாகனம் செலுத்திய சாரதி கைது

முல்லைத்தீவு பகுதியில் மது போதையில் வாகனம்செலுத்திய சாரதி கைது செய்யப்பட்டு தண்டப் பணமாக ரூபா 1500 அறவிடப்பட்டு அறிவுரை வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

இரவில் வெளிச்சம் இல்லாமல் வரும் வாகனச் சாரதி மது போதையில் வாகனம் செலுத்தும் சாரதி ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என முல்லைத்தீவு காவல்பணிமனைப்பொறுப்பாளர் தெரிவித்தார். (20)

## தாய்லாந்து கண்ணிவெடி நிபுணர்களை அழைத்து பயிற்சியளிக்க அரசு கோரிக்கை

இலங்கையின் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் பொது மக்களுக்கு பயிற்சியளிக்க தாய்லாந்தில் இருந்து மேலும் கண்ணிவெடி அகற்றும் நிபுணர்கள் தேவை என்று சிறிலங்கா அரசு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே பத்து தாய்லாந்து கண்ணிவெடி நிபுணர்களால் வழங்கப்பட்ட பத்துமாதபயிற்சி வெற்றிகரமாக முடிவடைந்ததாக தாய்லாந்து கண்ணிவெடி அகற்றும் நிலையத்தின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சித் திட்டத்தை மேலும் விஸ்தரிக்கவேண்டும் என்று மேலும் கண்ணிவெடி நிபுணர்கள் இலங்கைக்கு தேவை என்று சிறிலங்கா அரசு தெரிவித்துள்ளது. மேற்படி வேண்டுகோளை தாய்லாந்து அரசுக்கு அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ள பணிப்பாளர் மேலும் நிபுணர்களை வரவழைப்பது பிரச்சினை எதும் இருக்காது என நம்பிக்கை தெரிவித்தார்.



கடந்த தீபாவளி தினத்தன்று கிளிநொச்சி மக்கள் வங்கிக்கிளையில் ரூபா 10,000சேமிப்பிலிட்டவர்களுக்குக் கிளிநொச்சி மக்கள் வங்கிக்கிளை முகாமையாளரினால் குத்துவிளக்கு அன்பளிப்புச் செய்யப்படுகின்றது. (படம் –சோதி)

நிதர்சன நிறுவனத்தின்
15ஆம் ஆண்டு நிறைவில் 2003-10-30 அன்று
ஈழத் தமிழரின் வாழ்வியலாகவும்
தமிழீழ விடுதலைப் போராட்ட காலத்தின் வரலாறாகவும் ஒளிரும்

# ஒளிவீச்சு காண்பியச் சஞ்சிகை

100வது சிறப்பிதழ் வெளிவருகின்றது

- தொடுவானம்
- நீதி கேட்கும் நெடுந்தீவு
- தசாப்தம் கடந்து நிற்கும் கடற்புலிகள்
- வித்தாகி வீழ்ந்த களப்படப்பிடிப்பாளர்கள்
- விடுதலைத் தீப்பொறி
- சமகாலப் பார்வை
- காஞ்சிரங்குடாப் படுகொலையின் நினைவில்
- கொள்ளை போகும் கடல் வளம்
- தமிழீழப் பெண்கள் எழுச்சி நிகழ்வு
- பிரச்சினை (குறும்படம்)

ஆகிய அம்சங்களுடன்




புதுமெருகும்,
புதுப்பொலிவும் துலங்க
10 வருடங்களாய் ஒளிவீச்சு
100வது சிறப்பிதழாக வெளிவரப்போகிறது.

தொடர்பு முகவரி
நிதர்சனம்
1002,திருநகர்,
கிளிநொச்சி.



# தமிழரசி நகைமாடம்
கிளிநொச்சி

(சி-8710)

தங்க நகை எதுவானாலும் எங்களிடம் வாருங்கள்
நம்பிக்கை நாணயம் நல்ல தரம்
தங்க நகைகளுக்கு இதுவே முக்கியம்

மக்கள் பணியில் 22மாற்றுத்தங்கத்தில் சகல நகைகளையும் குறித்த தவணையில் செய்து தருவதே எங்கள் பணி

தங்க நகைகள் அழகானவை பெறுமதியானவை. இந்த மாடங்கள் அதைத் தருகின்றன.

## எங்கள் நிறுவனங்கள்

01,தமிழ் நிலா நகைமாடம் மல்லாவி
02,அழகு நிலா நகைமாடம் தண்ணீரூற்று
03,தமிழ் மதி நகைமாடம் உடையார் கட்டு
04,தமிழரசி நகைமாடம் கந்தபுரம்
05,தமிழ் மதி நகைமாடம் விசுவமடு
06,யாழரசி நகைமாடம் முழங்காவில்
07,தமிழரசி நகைமாடம் கிளிநொச்சி
08,தமிழரசி நகைமாடம் புதுக்குடியிருப்பு
09,தமிழ் மதி நகைமாடம் வட்டக்கச்சி
10,வான்மதி நகைமாடம் புதுக்குடியிருப்பு



**சிந்தனைக்கு**

சமூக நீதியும், சனநாயக சுதந்திரங்களும் தழைத்தோங்கும் ஓர் உன்னத சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதே எமது அரசியல் இலட்சியமாகும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 27-10-2003

## தோல்வியின் விளைவு!

நவம்பர் மாத நடுப்பகுதியில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ள வரவு-செலவுத் திட்டத்தைத் தோற்கடித்து, அரசாங்கத்தைக்கவிழ்க்கும் நோக்கில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஜே.பி.வி.யினரைச்சந்தித்துப் பேச்சு வார்த்தை ஒன்றை நடத்தியுள்ளார்.

ஆட்சிக்கவிழ்ப்பு நோக்கில் சனாதிபதி சந்திரிகாவும் ஜே.வி.பியும் பேச்சுக்களை நடத்துவது ஒன்றும் புதுமையானது அல்லத் தான் இவ்விரு கட்சிகளும் கொள்கை வேறுபாடுகள், சிந்தனை வேறுபாடு கொண்டவையாக இருப்பினும் இவ் விடயத்தில் மட்டும் அவை ஒரே நிலைப்பாடு கொண்டவையாகவே உள்ளன. அதாவது ஐ.தே முன்னணி அரசாங்கத்தை கவிழ்த்தல் என்ற நிலைப்பாட்டில் மட்டும் இருதரப்பினர் இடையிலும் வேறுபாடு இல்லை.

ஆயினும் சனாதிபதி சந்திரிகா இத்தகைய விரைவில் ஜே.வி.பியுடன் சந்திப்பு ஒன்றை நடாத்துவதற்கும் ஆட்சிக்கவிழ்ப்பு பற்றி பிரஸ்தாபிப்பதற்கும் முன்வந்தமையானது, சனாதிபதி சந்திரிகா ஆட்சியாளருக்கு எதிரான தமது நடவடிக்கைகள் யாவும் தோல்வி கண்டுவிட்டது என்பதை அவர் உணரத்தலைப் பட்டதன் வெளிப்பாடே ஆகும்.

அதாவது யுத்த நிறுத்தத்தை குழப்புதல் உட்பட அரசாங்கத்துக்கு எதிரான நடவடிக்கைகள் தோல்வி கண்டுவிட்டது என்பதை அக்கணிப்பினாலேயே ஆகும். இறுதியாக மேற் கொள்ளப்பட்ட மாபெரும் கண்டனப்பேரணி தோல்வியில் முடிவடைந்தமை பல அரசியல் விளைவுகளுக்கு காரணமாகியுள்ளது என்றே கூறலாம்.

இது சிறிலங்கா சுதந்திரக்கட்சியைப்பொறுத்தும் பொ.ஐ.முன்னணியைப்பொறுத்தும் பெரும் தோல்வி என்பது மறுக்கப்படமுடியாத ஒன்றே. வேறுவிதமாகக்கூறுவதானால் மக்கள் தம்பக்கம் உள்ளார்கள் என்பதை நிரூபிப்பதற்கு சனாதிபதி எடுத்த முயற்சிகள் தோல்வி கண்டது எனலாம். இது சனாதிபதி சந்திரிகாவுக்கு பெரியதொரு பின்னடைவே ஆகும்.

ஏனெனில் இத்தோல்வியானது சிறிலங்கா சுதந்திரக்கட்சியின், நம்பிக்கைகளையே தகர்க்கத்தக்கதாகும். அதாவது எவருடைய துணையும் இன்றி (ஜே.வி.பி ஏனைய இடதுசாரிகள்) சுதந்திரக்கட்சியினால் தனித்து நின்று அரசாங்கத்தை வெற்றிகொள்ள கவிழ்க்கமுடியும் என்ற கற்பனை கலைந்து போனது. அடுத்ததாக இரண்டும் கெட்டான் நிலையில் இருந்து கொண்டு அதாவது வெளியாக சமாதானத்திற்கு ஆதரவு எனக் கூறிக்கொண்டு – உள்ளே சமாதானத்திற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மக்கள் அனைவரையும் குழப்பத்துக்குள்ளாக்குமே தவிர மக்கள் ஆதரவைப் பெற்றுத்தர மாட்டாது என்பதையும் இது உணர்த்துவதாய் இருந்தது.

இந்த நிலையில் தான் சில வாரங்களுக்கு முன்னர் வரையில் ஜே.வி.பி உடன் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்த முடியாது – அதனைப் புறந்தள்ளிய சனாதிபதி சந்திரிகா மீண்டும் ஜே.வி.பி.யுடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளார். ஆட்சிக்கவிழ்ப்பு பற்றி ஆலோசனை நடத்தியுள்ளார். ஜே.வி.பி.யினரைப் பொறுத்து இது வெற்றிகரமானதொன்றே எனக் கொள்ளலாம்.

ஆனால் இம்முறை ஜே.வி.பியுடன் பேச்சுக்களை நடாத்த விழையும் சந்திரிகா குமாரதுங்க கடந்த முறையை விட விட்டுக்கொடுப்புக்களை செய்யவேண்டியதாக நிச்சயமாகவே இருக்கும்.

ஏனெனில் தீபாவளி அன்று நடாத்திய பேரணி சனாதிபதி சந்திரிகாவுக்கு தனது பலம் குறித்து மதிப்பீட்டை வெளிப்படுத்தியிருக்குமானால் ஜே.வி.பிக்கு விட்டுக்கொடுப்புக்களை அவர் தவிர்க்கமுடியாது செய்தே ஆக வேண்டி இருக்கும். ஆயினும் நிறைவேற்று அதி காரத்தைப்பயன்படுத்தாது ஆட்சிக்கவிழ்ப்பொன்றை மேற் கொள்ளமுடியுமா? என்பது ஜே.வி.பியுடன் கூட்டு ஏற்படினும் சந் தேகமே. இந்நிலையில் ஜே.வி.பிக்கு விட்டுக்கொடுப்பு அவசியமா என்பதும் சிந்திக்கவேண்டியதாகவே இருக்கும்.

## வர்த்தக அமைச்சருடன் காரசாரமான விவாதம்; மகாபொலவிற்கு உதவியாளர் சனாதிபதி மறுப்பு

(கொழும்பு)

கடந்த 22ஆம் திகதி பாராளுமன்றில் நடைபெற்ற சந்திப்பில் மகாபொல நிதியத்திற்கு சனாதிபதி நிதியிலிருந்து உதவித்தொகை வழங்கப்படவேண்டும் என வர்த்தக அமைச்சர் ரவி கருணாநாயக்கா சனாதிபதியிடம் கோரியபோது இருசாராருக்குமிடையில் காரசாரமான விவாதம் ஏற்பட்டது.

சனாதிபதி நிதியத்தின் விதிகளுக்கு ஏற்ப அபிவிருத்தி லொத்தரில் இருந்து கிடைக்கும் லாபத்தில் 50 வீதத்தை வழங்கமுடியாது என்பது சந்திரிகாவின் கருத்தாக இருந்தது. எனினும் அபிவிருத்தி லொத்தர் ஆரம்பிக்கப்பட்டபோது சனாதிபதி நிதியத்திற்கும் மகாபொல நிதியத்திற்கும் நிதிவழங்குதலுக்காக இவ்விருநிறுவனங்களும் இணைந்து முதலீடு செய்வது எனவும் இலாபத்தை சமமாகப் பங்கிடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டதாகஅமைச்சர் கருணாநாயக்கா விவாதித்தார்.அதுமட்டுமன்றி தமக்கு வழங்கப்படும் நிதியைவிட சனாதிபதி நிதிக்குப்பெருந்தொகை செலவழிக்கப்படுவதாகவும் அவர் தெரிவிக்கின்றார். இதற்காக ஆதாரம் தம்மிடம் இருப்பதாகவும் அடுத்த அமைச்சரவைக்கூட்டத்தில் அவற்றை சமர்ப்பிப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வரவு–செலவுத்திட்ட வாக்கெடுப்பில் 11 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதரவளிக்க முடிவு!

**– அரசில் இணையவும் பேச்சு**

வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் இறுதி நாளன்று எதிர்கட்சியைச் சேர்ந்த எம்பிக்கள் 11பேர் திட்டத்தை ஆதரித்து வாக்களிக்கவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் எண்மர் பொ.ஐ.மு அரசின் அமைச்சர்களாக இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் நிபந்தனைகளின் பேரில் அரசில் இணைவதற்காக ஐ.தே.க அமைச்சர்கள் சிலருடன் பேச்சு நடத்தியுள்ளனர். ஐ.தே.கவில் ஆரம்பத்தில் இணையவிருந்த பொ.ஐ.முன்னணி அமைச்சர்கள் நால்வரும் இவர்களில்அடங்குவர்.

இதற்கிடையில் ஐ.தே. முன்னணியைச் சேர்ந்த இருவர் எதிர்க்கட்சிக்குத்தாவ இருந்த போதும் கட்சியின் உயர் பீடத்துடன் பேச்சு நடத்தி தமது நோக்கத்தை கைவிட்டுள்ளனர்.

அரசாங்கத் தரப்பில் இணைவோரின் பாதுகாப்பைப் பலப்படுத்த உயர்மட்டக்குழு தொடர்ந்து பேச்சு நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நாட்டின் நிலையை விளக்கிக்கூறும் "தேசபிரேமி" யின் முதல் நடவடிக்கை!

**——— அநுராதபுரத்தில் நாளைஆரம்பம்**

நாட்டின் தற்போதைய நிலையில் மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள தேசபிரேமி இயக்கத்தின் தேசிய பேரணி நாளை 3மணிக்குஅனுராதபுரத்தில் கூடவுள்ளது.

"நாட்டைக்காப்போம்" "முன்னே செல்வோம்"என்பன பேரணியின் தொனிப்பொருளாகும் .அதற்கு முன்பாக அன்று முற்பகல் சிறிமகா போதி விகாரையில் மதவழிபாடு நடைபெறும். இப்பேரணியில் எல்லே குணவன்ச தம்பரஅமர ஆகிய புத்தபிக்குகளும் அனுராபண்டார நாயக்கா, அர்ஜுனரணதுங்க,பொ.ஐ.மு அமைச்சர்கள்,எம்பிக்கள், ஜே.வி.பி எம்பிக்கள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## ஒக். இறுதிக்குள் காலபோக விதைப்பினை மேற்கொள்ளக் கோரிக்கை!

(ஒட்டுசுட்டான்)

கிளிநொச்சி மாவட்டத்தில் 2003/2004ஆம் ஆண்டு மழையை நம்பி காலபோக நெற்செய்கையினை மேற்கொள்வோர் எதிர்வரும் மார்கழி (தமிழ் கணக்கின்படி) மாதத்தின் பின்னர் மழை பெய்யக்கூடிய அறிகுறிகள் இல்லை என்பதால் சிறுபோகத்தின் மூன்று மாத நெல்லை உற்பத்தி செய்வோரிடம் தூய இன நெல்லை கொள்வனவு செய்து இம்மாத முடிவிற்குள் (ஒக்ரோபர் 31) விதைத்துக்கொள்ளுமாறும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரும் விவசாய திணைக்களத்தினரும் கேட்டுக் கொள்கின்றனர். இதேவேளை உழுந்து, கௌபி, நிலக்கடலை போன்ற சிறுதானிய பயிர்ச்செய்கையை உடனடியாக மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.(05)

## நீரைத் தனியார் மயப்படுத்த அரசாங்கம் தீர்மானம்

நீரை தனியார் மயப்படுத்துவதற்கான பிரேரணை ஒன்றை அரசாங்கம் வெளியிட்டுள்ளது. இதன் அடிப்படையில் இலங்கையில் உள்ள நீர் நிலைகள் அனைத்தும் தனியார் மயப்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி ஒருவருக்குச் சொந்தமான கிணறு ஒன்றில் உள்ள தண்ணீரை அந்தக்குடும்பம் மட்டும் பாவிக்கமுடியும். மீறி எவரும் பெறுவாராயின் அது குற்றமாகக் கருதப்படுவதுடன் நீதிமன்றம் செல்லும் பட்சத்தில் 5000 ரூபா முதல் 20000 ரூபா வரையானதண்டனைக்குரிய குற்றமாகச் செலுத்த வேண்டும். இத்திட்டத்தினை ஆசிய அபிவிருத்தி வங்கியும் உலகவங்கியும் மேற்கொண்டுள்ளன. இதேவேளை இந்நடைமுறை அமுலுக்கு வரும் பட்சத்தில் ஐந்து வருடத்தின் பின்னர் இலங்கையில் நீரை இலவசமாகப் பெறமுடியாது எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் விவசாயிகளே பாதிப்படைவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

## 200 கைதிகள் விடுதலை

(கொழும்பு)

சிறிய குற்றங்களுக்காக சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்களை விடுதலை செய்யும் சிறைச்சாலை ஆணையாளரின் திட்டத்தின் கீழ் அபராதம் விதிக்கப்பட்ட சிறுதொகைகளை செலுத்த முடியாது சிறை சென்ற சுமார் 200 கைதிகள் விடுதலை ஆகியிருப்பதாக ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## 3 டெஸ்ட், 7 ஒருநாள் போட்டிகளை நடத்த பாகிஸ்தான் யோசனை தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு இடையே விளையாட்டுப் பிணைப்புக்கள் மீண்டும் தொடங்கியுள்ளதால் இந்தியாவுக்கு எதிராக மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் ஏழு ஒருநாள் சர்வதேச போட்டிகளிலும் விளையாட பாகிஸ்தான் உத்தேசித்துள்ளது.

இது குறித்து அடுத்த ஆண்டு முற்பகுதியில் எதிர்பார்க்கப் படுவதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் செய்தித்தொடர்பாளர் கையித் ஹசன் பைசலாபாத்தில் தெரிவித்துள்ளார்.

பெப்ரவரி 19ஆம் திகதி முதல் ஏப்பிரல் எட்டாம் திகதி வரை இப்போட்டிகளை நடத்த இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்திடம் பாகிஸ்தான்யோசனை தெரிவித்திருந்தது.

## உதைபந்தாட்ட பயிற்சி முகாம் நிறைவு பங்கேற்றோருக்கு சான்றிதழ் வழங்கல்


கிளிநொச்சி மாவட்ட உதைபந்தாட்ட லீக்கினால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட பயிற்சிமுகாம் நிறைவும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்று கிளி. மத்திய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. கிளி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இப்பயிற்சி முகாமில் கிளி.மாவட்டத்தின் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் இருந்தும் 30க்கும் மேற்பட்டவீரர்கள் கலந்து கொண்டனர். கிளி.மாவட்ட விளையாட்டு அதிகாரி கனகராசாவின் நெறிப்படுத்தலில் இரண்டு நாட்கள் நடைபெற்ற மேற்படி பயிற்சி முகாமிற்கு பயிற்சியாளராக எஸ்.அன்ரனிப்பிள்ளை செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# தமிழ்-முஸ்லிம்களுக்கிடையேயான பிரச்சினைக்கு கருத்தொருமைப்பாட்டு அடிப்படையில் தீர்வு

## திருமலையில் நடைபெற்ற சந்திப்பின் பின் அறிவிப்பு

தமிழ் முஸ்லிம்மக்களின் நல்லுறவைச் சீர்குலைக்கும் சக்திகளை அடையாளம் கண்டு ஒதுக்கி வைக்கவும் அதன் மூலம் இரு தரப்புகளின் பிரச்சினைகளுக்கு கருத்துடன்பாட்டினடிப்படையில் தீர்வு காணவும், நேற்றுக் காலை திருகோணமலை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அலுவலகத்தில் நடைபெற்ற பேச்சக்களின் போது இணக்கம் காணப்பட்டதாக பேச்சுவார்த்தை முடிவில் இரு தரப்புத் தூதுக்குழுக்களின் தலைவர்களும் கூட்டாகச் செய்தியாளர்களுக்குத் தெரிவித்தனர். விடுதலைப் புலிகள் தூதுக் குழுவிற்குஅதன் திருமலைமாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் தலைமை வகித்தார். தூதுக் குழுவில் பொருண்மிய மேம்பாட்டுப் பொறுப்பாளர் தர்மனும் அங்கம் வகித்தார்.கிண்ணியா ஹுமிலத்துல் உலமா சபைத் தூதுக் குழுவிற்கு ஹிதாயத் துல்லா மௌலவி தலைமை வகித் தார். போர்நிறுத்தக் கண் காணிப் புக்குழு திருமலைத்தலைவர் அப்டல் புர்கான் முன்னனியில் நடை பெற்ற இப்பேச்சுவார்த்தை யில்,திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் , சிரேஷ்ட பொலிஸ் அதிபர் உபாலி ஹேவகே,பொலிஸ் தயா சமரவீரா மற்றும் அதிகாரிகளும் பங்கு பற்றினர். கிண்ணியாவில் நடைபெற்ற அசம்பாவிதங்கள் குறித்து பேச்சுவார்த்தையின் போது விரிவாக ஆராயப்பட்டதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருமலைத் தலைவர் அப்டல் புர் கான் தெரிவித்தார். அப்பேச்சுவார்த்தையில் கிண்ணியா பிரதேசத்தில் அண்மைக் காலத்தில் இடம்பெற்ற கடத்தல் சம்பவங்களுக்கும்விடுதலைப் புலிகளுக்கும் எதுவித தொடர்பும் கிடையாதென்று



விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் திட்ட வட்டமாகத் தெரிவித்தார்.இனங்களுக்கு இடையேயான நல்லுறவைப் பேணுவதற்கான நடவடிக்கைகளை விடுதலைப்புலிகள் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வார்களென்று பேச்சுவார்த்தையின் போது தாம் தெரிவித்ததாக அரசியல் துறைப் பொறுப்பாளர் திலக் ெதரிவித்தார். விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறின் அதுகுறித்து விடுதலைப் புலிகளும் இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் நடைபெறும் சம்பவங்களுக்கு இராணுவமும் பொலிசாரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இணக்கம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. மாட்டுவண்டில் கடத்தல், உழவு இயந்திரங்கள் கடத்தல் ஆகியன குறித்து கண்காணிப்புக் குழுவினரும் பொலிசாரும் அந்தந்த இடங்களுக்கு விசாரணை நடத்தி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது என்று பேச்சுவார்த்தையின் போது இணக்கம் காணப்பட்டதாகப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றிய மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனும் சிரேஷ்ட பொலிஸ் அதிபர் உபாலி ஹேவகேயும் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தனர். இரு தரப்பும் தொடர்ச்சியாக இது போன்ற பேச்சுவார்த்தைகளை நடத்துவதென்று இணக்கம் காணப்பட்டது. அடுத்த கட்டப் பேச்சு டிசம்பர் 7இல் நடைபெறும் தேவையேற்படும் போது முன்கூட்டியே பேச்சுக்கள் ஒழுங்குகள் செய்யப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (25)

# கடற்படை வாகனத்துடனான விபத்தில் இளைஞர் காயம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பகுதியில் ஏற்பட்ட கடற்படை தண்ணீர் பௌசர் மற்றும் மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று மதியம் 11 மணியளவில் காரைநகர் கடற்கரை வீதியில் ஏற்பட்ட இவ் விபத்தில் கோவில் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வெஸ்லி சண்டேனர் (வயது-26) என்ற இளைஞனே காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ் விபத்தைத் தொடர்ந்து அப்பகுதியில் படையினர் குவிக்கப்பட்டு பதற்றம் நிலவினாலும் எதுவித அசம்பாவிதங்களும் ஏற்படவில்லை. (33)

# முனை மீனவர்களுக்கு தொடர்ந்தும் இராணுவம் "பாஸ்" வழங்கல்

(வடமராட்சி)

பருத்தித்துறை முனைப்பகுதியில் மீனவர்களுக்கான பாஸ் அனுமதியை வழங்கும் பணியினைத் தொடர்ந்தும் படையினரே ஈடுபட்டுள்ளனர். நேற்று மாலை வரை குறித்த பகுதியிலுள்ள மூன்று இராணுவச் சோதனைச்சாவடிகளுடாக வழமைபோன்று தமது பாஸ்களைப் பதிவு செய்த பின்னரே தொழிலுக்குச் செல்ல அனுமதிக்கப் பட்டனர். இதேவேளை குறித்த பகு திகளில் பொலிசார் மீனவர்களுக்கான பாஸ் அனுமதிகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட் டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஒஸ்ரின் பெர்ணாண்டோ தமக்கு அறிவித்திருந்தன பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அறிவித்துள்ளார்.

ஆயினும் பருத்தித்துறைப் பொலிசார் குறித்த பகுதிகளில் பிரசன்னமாகி ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததை மட்டுமே அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இதனிடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆர்ப்பாட்டப்பேரணி மற்றும் மறியல்போராட்டங்களில் பங்கெடுத்த மீனவர்கள் சிலர் படையினரால் அச்சுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பருத்தித்துறை அதிஉயர் பாதுகாப்பு வலயப்பகுதியினுள் குடியமர்ந்துள்ள மீனவர்கள் சிலரே கடற்கரை வீதியில் உள்ள இராணுவ சோதனைச்சாவடியில் வைத்து மிரட்டப்பட்டுள்ளனர். இவ் அதிஉயர் பாதுகாப்பு வலயத்தினுள் 29 குடும்பங்கள் வரையில் குடியமர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (27)

### -பாக்தாத்தின் விடுதி மீது-

# சரமாரியான றொக்கற் தாக்குதல் அமெரி. கேணல் தர அதிகாரி பலி

பாக்தாத்தில் அமெரிக்க இராணுவ உயரதிகாரிகள் தங்கியிருக்கும் அல்ரசீத் விடுதி மீது நேற்று நடத்தப்பட்ட தாக்குதலில் அமெரிக்க இராணுவக் கேணல் ஒருவர் பலியானார் 15 பேர் காயமடைந்தனர்.

அமெரிக்க பாதுகாப்பு பிரதிச் செயலாளர் பௌல் அவ் விடுதிக்கு விஜயம் செய்திருந்த வேளை இத்தாக்குதல் நடத்தப்பட்ட போதும் அவருக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை.

இவ்விடுதி மீது சரமாரியாக றொக்கற் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### தமிழ...

மாவட்டக்கிளை வன்மையாகக் கண்டிக்கின்றது. பொறுப்பு வாய்ந்த பதவியில் இருக்கும் ஆனந்த சங்கரி முரண்பாடான கருத்துக்களைத் தெரிவித்து தமிழர் விடுதலைக் கூட்டணியை இக்கட்டான நிலைக்குக் கொண்டு சென்றுள்ளார்.

இதன் காரணமாக அவர் தானாகவே முன்வந்து கட்சியின் தலைமைப் பதவியைத் துறக்க வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழுவைக் கூட்டி ஆனந்த சங்கரியை தலைமைப் பதவியில் இருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதனைத் தவிர போர் நிறுத்தத்திற்கு முரணான வகையில் வடக்கு-கிழக்குப் பகுதியில் அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் அரச படையினர் நிலை கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மீள்குடியேற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எனவே அரச படையினர் பொதுக் கட்டடங்கள், தனியார் கட்டடங்களில் இருந்து வெளியேற வேண்டும். விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாக சபை சம்பந்தமான திட்ட வரைவை முழுமையாக ஏற்றுக் கொண்டு அரசாங்கம் வெகு விரைவில் அந்த சபையை இயங்கச் செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும் சர்வதேச சமூகம் இதற்கான அழுத்தத்தை சிறிலங்கா அரசுக்கு கொடுக்க வேண்டும் எனவும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட கிளை ஏகமனதாக தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளது. (32)

### மனோ...

தயாரிக்கும் இடைக்கால நிர்வாக திட்ட வரைவு தொடர்பாக சிங்கள மக்களுக்கு சரியான முறையில் விளக்கமளிக்க வேண்டுமென் பதை தாம் விடுதலைப்புலிகளிடம் எடுத்துக்கூறியுள்ளதாகத் தெரிவித்தார். (லோ)

### மூதூர்...

தாக திருகோணமலை மாவட்டத்துக்குப் பொறுப்பான 22 பிரிகேட் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் தெரிவித்தார். நேற்றுக் காலை மூதூர் இறங்கு துறையில் வைத்து தாக்குதலுக்கு உள்ளாகியதில் வெட்டுக் காயங்களுக்குள்ளான இரண்டு தமிழர்களும் பின்னர் மோட்டார் பயணிகள் படகு மூலம் திருகோணமலைக்கு கொண்டுவரப்பட்டு திருகோணமலை அரச வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டனர். சனிக்கிழமை காலை காயமடைந்த இரு தமிழர்களும் மூதூர் வைத்தியசாலையில் அனு மதிக் கப்பட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (25)

### க.கா...

இதேவேளை இது தொடர்பான அறிவுறுத்தல்கள் தங்களுக்கு கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ள சிறிலங்கா பாதுகாப்பு தரப்பினர் இந்த நடவடிக்கையை மேற் கொள்வது சனாதிபதியின் பொறுப்பெனத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து தமிழ்க் கட்சி பிரதிநிதிகள் தெரிவிக்கும் போது சனாதிபதியின் உத்தரவினால் தங்களுக்கு பிரச்சினை எதுவும் இடம்பெறும் பட்சத்தில் யாரிடம் முறையிடுவது என்ற பிரச்சினை வரப்போகிறது எனத் தெரிவித்துள்ளார். (32)

# மணல் அள்ளுவது தொடர்பான கூட்டம் மக்களால் புறக்கணிப்பு

(வல்வை)

வடமராட்சி கிழக்கின் மணற்காட்டுப்பகுதியில் இருந்து கட்டட வேலைகளுக்கான மணலை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் பற்றி ஆராய கூட்டப்பட்ட கூட்டத்தை அப்பகுதி மக்கள் பகிஷ்கரித்துள்ளனர். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டட நிர்மாணப்பணிகள் மற்றும் திருத்தப் பணிகளுக்கான மணல் குறித்த மணற்காட்டுப்பகுதியிலேயே அகழப்பட்டுவருகின்றது.நாளொன்றுக்கு 500க்கும் மேற்பட்ட லொறிகள் டிராக்டர்கள் இப்பகுதியில் இருந்து மணல் அகழும் பணியில் ஈடுபட்டுள்ளன. இதனால் வேகமாக அப்பகுதியில் இருந்து மண் வளம் அற்றுப்போகின்ற நிலையில், மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள மணற்காடு மற்றும் குடத்தனை வாழ் மக்களின் வாழ்வை மேம்படுத்த அரசு எந்தவித நடவடிக்கையையும் மேற் கொள்ள வில்லையென அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

இந்நிலையில் நீண்டகாலமாக புனரமைக்கப்படாதுள்ள போக்குவரத்துப்பாதைகளை நிர்மாணித்தல் மற்றும் மின்சார விநியோகம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இப்பகுதி மக்கள் மணற்காட்டுப் பகுதியில் மணல் அகழ தற்போது அனுமதி மறுத்துவருகின்றனர். இதனால் குடாநாட்டில் கட்டட நிர்மாணப் பணிகள் பலவற்றையும் இடைநிறுத்தவேண்டிய நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதையடுத்தே வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி.பி.வேலாயுதம்பிள்ளையின் ஏற்பாட்டில் அப்பகுதி மக்களுக்கான கூட்டம் ஒன்றுக்கு நேற்று அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. (27)

### சமாதானத்தை....

சமாதானத்தைக் குழப்பும் செயற்பாடுகளில் ராணுவத்தினரும் தென்னிலங்கை இனவாத அரசியல் கட்சிகளும் தீவிரமாக செயற்பட்டு வருவதாக துணைப் பொறுப்பாளர் தங்கன் குற்றம் சாட்டினார்.

தேசிய எழுச்சிப் பேரவையின் இரண்டாவது யாழ். மாவட்ட பேராளர்களுக்கான சங்கம நிகழ்வு நேற்று யாழ். பல்கலைக்கழகத்தின் கைலாசபதி அரங்கில் நடைபெற்றுள்ளது.

தேசிய எழுச்சிப் பேரவையின் யாழ். மாவட்ட செயலாளர் சொலமன் சூ.சிறில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை யாழ். மாவட்ட அரசியல்துறைப் துணைப் பொறுப்பாளர் செம்மணனும், பொதுச்சுடரினை யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, மாவீரர் லெப்.கேணல் ஆதவனின் தந்தையார் முத்துக்குமார், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இதனைத் தொடர்ந்து ஆசியுரைகளை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் த.விக்கினேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் மோகனதாஸ், மௌலவி எல்.இக்வான் மற்றும் இந்துக் குருமார் ஒன்றியத்தைச் சேர்ந்த சிவசிறி மகா கணபதி திருக்குருக்கள், வணபிதா ஜெயக்குமார் அடிகளார் ஆகியோர் வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து தமிழீழ அரசியல்துறைப் துணைப் பொறுப்பாளர் தங்கன், தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி, விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா மற்றும் விரிவுரையாளர்கள், பொது அமைப்பாளர்கள் என பலர் கருத்துரைகளை வழங்கினர்.

இந்நிகழ்வில் பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர். (33)

### யுத்தத்தின்...

அமைச்சர் சந்திரசேகரன் தெரிவிக்கையில், மலையகத்தைப் பொறுத்தவரையில் இறுதித்தீர்வு ஏற்படும் போது மலையகமக்களின் பிரச்சினைகளையும் அதன் நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொள்ளவேண்டும் என்பதை நாம் அவர்களிடம் வலியுறுத்தியிருக்கின்றோம்.

அதேபோல இங்குநடக்கின்ற போராட்டங்களின் நியாயத்தன்மையை சிங்களமக்களுக்கு தெளிவுபடுத்தவேண்டும் என்பதையும் நாங்கள் அவர்களிடம் எடுத்துச்சொல்லியிருக்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

இந்நிலைப்பாட்டை சு.ப தமிழ்ச்செல்வன் ஏற்றுக்கொண்டார். அரசியல் தீர்வுக்கு மலையக மக்களின் முழுமையான ஆதரவைப் பெறுவதற்கும் மலையக அரசியல் அமைப்புக்கள் அனைத்தையும் ஒன்றிணைப்பதற்கு தமிழீழ விடுதலைப்புலகள் அமைப்பு பூரண பங்களிப்பைச்செலுத்துமெனவும் உறுதியளித்தார்.

அடுத்த பேச்சுவார்த்தை நகர்வுக்கு முன்னர் மீண்டும் மலையக மக்கள் முன்னணியுடன் பேசவிருப்பதாகவும் அமைச்சரிடம் தமிழ்ச்செல்வன் கூறினார். இடைக்கால நிர்வாகம் என்பது அரசியல் தீர்வுக்கான தற்காலிக முதல் நடவடிக்கையாக அமையும் என்றும் இனப்பிச்சினைக்கான தீர்வு பற்றிப்பேசும் போது மலையக மக்களின் பிரச்சினையையும் உள்ளடக்கப்படும் என்ற கோரிக்கையை அவர் ஏற்றுக் கொண்டார் என்றும் தெரிவித்தார். (லோ)

# குழு மோதலில் அதிகாரி பலி

தெகிவளை அத்கிரிய பிரதேசத்தில் விசேட அதிரடிப்படை அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

அம்பாறை போம்பகஸ்தலாவ முகாமில் கடமையாற்றும் விசேட அதிகாரியான நளின்குமார என்பவரே உயிரிழந்தவராவார்.

தனிப்பட்ட இருகுழுக்களுக்கிடையேயான மோதலின் போதே இவர் கொல்லப்பட்டதாக பொலிஸ் விசாரணைமுலம் தெரிய வந்துள்ளது. (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.